**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 16.07.2026**
**OS. No. 17/2022**
**வழக்கு சாட்சி DW.1–சித்தையன், த/பெ.பழனியப்பகவுண்டர்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

8) வாதிகளிடம் அடமானம் வைத்த தொகை செலுத்தியபிறகும், அவர்கள் பத்திரத்தை ரத்து செய்து கொடுக்காததற்கு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், சுமார் 6, 7 வருடங்களுக்கு முன்பு கொடுத்தேன். அதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் பத்திரம் எழுதி கொடுத்தது 2006 என்றும், ஆனால் சுமார் 20 வருடங்கள் கழித்து புகார் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளின் பெயரிலுள்ள பத்திரத்தை ரத்து செய்யுமாறு நான் தற்போது வரை எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9) கடனுக்காக என்னுடைய நிலத்தை அபகரித்துவிட்டார்கள் என்று சொல்லி நில அபகரிப்பு பிரிவுக்கு நான் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. வாதிகளின் பெயரில் பட்டா மாறுதல் விண்ணப்பத்தில் கூட பழனியப்பன் மகன் சித்தன் என்பவர் மீது பார்வை 3ல் கண்ட கிரைய பத்திரப்படி லேட்.பழனியப்பன் கவுண்டர் மனைவி பெருமாயி என்பவர் கிரையம் பெற்றுள்ளதில், ஆஜர் பட்டாதாரர்களிடம் விசாரித்து கூட்டுப்பட்டாவில் பெயர் சேர்க்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், அதில் மாதேசனுக்கு எந்த பாகமும் வழங்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை.

10) வேலு என்பவர் எங்கள் மீது ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் எங்கள் மீது போடவில்லை, 1ம் வாதி பெருமாயி மீது தாக்கல் செய்துள்ளார். இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.49/2022 என்ற வழக்கில் என்னை 7ம் பிரதிவாதியாய் சேர்த்து வேலு என்பவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், அதை என் நிரூபண வாக்குமூலத்தின் முதல் பக்கத்தில் சொல்லிவிட்டு, அதை மறைத்து தற்போது

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதி மாதேஷின் கிரைய ஆவணம் செல்லாது என்று சொல்லி எனக்கு ஒரு முறை அறிவிப்பு வந்தது. மேற்படி வழக்கில் நான் ஆஜராகவில்லை என்றால் எங்களை அழைக்கவில்லை. முறையாக மேற்படி வழக்கில் எனக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் நான் வேண்டுமென்றே ஆஜராகாததால் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை.

11) எதற்காக என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று நான் வேலுவிடம் கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை, அவர் தான் எங்களிடம் பிரச்சனை செய்தார். வேலுவின் தந்தை முத்துகவுண்டர் எனக்கு பங்காளி முறை என்றால் என் சித்தப்பா மகன் ஆவார். வேலுவின் தந்தைக்கும், என்னுடைய தந்தைக்கும் பொதுவில் பாத்தியப்பட்ட சொத்து தான் தாவா சொத்து என்றால் சரியல்ல. 16 சென்ட் நிலம் வேலுவிற்கும், மாதேஷிற்கும் பாத்தியப்பட்டது என்று நான் சொல்லும் நிலையில், நான் என் தரப்பில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 பட்டா எண்.2658 ல் என்னுடைய பெயர் இல்லை என்றால் சரிதான், மீதமுள்ள 1 சென்ட் நிலத்தில் தான் என் பெயர் இருக்கும்.

12) மேற்படி பி.வா.சா.ஆ.2 பட்டாவிலுள்ள நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண் தெரியவில்லை. ச.எண்.307/16B ல் சொத்திலுள்ள கிணற்றில் மட்டும் தான் எனக்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.2658 ல் உள்ள ச.எண்.307/16C ஐ ஒட்டி தான் மேற்கண்ட ச.எண்.307/16B அமைந்துள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. வாதிக்கு நான் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தில் நான் தான் அந்த சொத்தின் அசல் உரிமையாளர் என்று கூறியும், என்னுடைய மேஜர் மற்றும் மைனர் மகன்களை உட்படுத்தி கிரையம் செய்து கொடுத்துவிட்டு ச.எண்.307/16C ஆனது வேலு மற்றும் மாதேஷிற்கு மட்டுமே பாத்தியப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, 1 சென்ட் நிலம் எனக்கு பாத்தியப்பட்டதால் அது பொறுத்து என்னை கையொப்பம் செய்யச்சொன்னதால் செய்தேன்.

13) மேற்படி பத்திரத்தில் மாதேஷ் என்பவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எவ்வித விவரங்களும் அந்த ஆவணத்தில் குறிப்பிடாமல் அவரிடம் கையொப்பம்

பெற்று தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்தை எவ்வாறேனும் அபகரிக்கவேண்டும் என்பதால், அ.வ.எண்.49/2019 என்ற வழக்கில் நான் ஆஜராகாமல் இருந்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள வீட்டில் வாதி வசித்து வருவதற்கு வரி ரசீதுகள் அனைத்தும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், ஆனால் அந்த வீட்டை நான் தான் கட்டினேன் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, அவரது கிரைய பத்திரத்திலேயே வீடு குறித்து குறிப்பிடவில்லை.

14) 2006 ல் வாதிகள் சொத்தை கிரையம் பெற்றது முதல் 2021 வரை கந்தாயம் செலுத்தியதற்கான ரசீதுகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், ஆனால் அந்த நிலம் அவர்களுடையது இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நாங்கள் கிரையம் செய்து கொடுத்தபோது அங்கு வீடு இல்லை. வாதிகள் காலி நிலத்தை கிரையம் பெற்ற பிறகு தான் அவர்கள் அதில் வீடு கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல, தற்போதும் அந்த நிலம் காலியாகத்தான் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள கல்கட்டிடம் தான் தாவா சொத்திலுள்ள வீடு என்றும், அதற்கு மின் இணைப்பு எண்.1330091569 என்று வழங்கப்பட்டுள்ளது என்றும், அதில் தான் 1ம் வாதி பெருமாயி வசித்து வருகிறார் என்றால் அந்த வீடு வேறு சர்வே எண்ணில் உள்ளது. அந்த வீடு அமைந்துள்ளதாக சொல்லும் சர்வே எண் என்னவென்றால் எனக்கு தெரியவில்லை, நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 2026ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.